1970 மார்ச் 25]

Stipends for teachers training

* 537 Q.—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(a) whether the Government has decided not to grant stipends in future for teacher trainees; and

(b) if so, the reason for such decision?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. விநயகம் : பெரும்பாலும் இந்த டீச்சிங் ட்ரெயினிங் எடுக்க வருகிற மாணவ மாணவிகள் ஏழைகளாக இருப்பதால் கொடுத்து வந்த உதவிச் சம்பளத்தை, அவர்களுக்கு இது பெரும் உதவியாக இருப்பதால் தொடர்ந்து கொடுப்பதில் அரசாங்கத் திற்கு என்ன அதிகப்படியான செலவு ஆகிவிடும் ? கோரிக்கையைக் கேட்டு அந்தத் தொகையை மீண்டும் தருவதற்கு என்ன கஷ்டம் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர் பயிற்சிக்கு வரும் மாணவர்களுக்கு 'ஸ்டைபண்ட்' என்ற முறையில் உதவித் தொகை தரப்பட்டு வந்தது அதற்கு அடிப்படையான காரணம் இந்த ஆசிரியர் துறைக்குப் பலரையும் ஈர்க்க வேண்டும் என்று ஸ்டைபண்ட் கொடுக்கப்பட்டது. மேலும், அப்பொழுது ஆசிரியர் பயிற்சிக்கு வருபவர் எண்ணிக்கை குறைவாக இருந்ததும் காரணம். பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேண்டும் என்கிற நிலை இருந்தது. ஆகவே, அந்தத் துறையை கவர்ச்சிகரமாக்க ஸ்டைபண்ட் கொடுத்தோம். அந்த நிலை இப் பொழுது மாறி, 300 இடங்களுக்கு 3,000 விண்ணப்பங்கள் வரும் நிலை ஏற்பட்டு விட்டதால் அந்தத் தொகையை நிறுத்திவிடலாமா என்ற யோசனை இருந்தது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களின் கருத்தும் இருந்ததால், ஸ்டைபண்டை நிறுத்த வேண்டாம் என்றும், ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கும் உதவியாக இருக்கட்டும் என்றும், நிறுத்தும் யோசனையை நிறுத்தி விட்டுத் தொடர்ந்து அளிக்கப்படுகிறது. அது எடுக்கப்படவில்லை. அப்படிப்பட்ட யோசனை இருந்தது சீனியர் பேசிக்குக்கு 16,06,543 ரூபாயும் செகண்டரி கிரேடுக்கு 2,44,388 ரூபாயும், ஜூனியர் பேசிக் பிரிவுக்கு 5,09,219 ரூபாயும், ஹையர் கிரேடுக்கு 65,242 ரூபாயும், ஆகமொத்தம் 24,25,392 ரூபாய் ஸ்டைபண்ட் என்ற வகையில் சென்ற ஆண்டு கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தி ஆசிரியர்களின் குறைகள்

*538 வின—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் இந்தி பிரசார சமிதியின் சார்பில் இந்தி ஆசிரியர்கள் குறைகளைப்பற்றி 29-1-1968 தேதியில் மாண்புமிகு முதல் அமைச்சர், கல்வி அமைச்சர் ஆகியோருக்கு எழுதி யுள்ளார்களா ?